29.04.2021 அசல் வழக்கு.எண். 460/2013

வா.சா.1 கோவிந்தராஜ்

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வழக்கு சொத்தானது காலி இடம் என்றால் சரிதான். அதில் ஆதியில் பயிர் வைத்திருந்தோம் என்றால் சரிதான். என் தகப்பனார் முருகம்பேடு கிராமத்தில் வசித்துவந்தார். பிரதிவாதியின் தகப்பனார் வெங்கடாபுரம் அம்பத்தூரில் வசித்து வந்தார் என்றால் சரிதான். சாலைக்காக எடுத்துக் கொண்ட நிலத்திற்கு பணம் எவ்வாறு அளிக்கப்பட்டது என்றால் பணமாகத்தான் கொடுத்தார்கள் அதனை சைதாப்பேட்டைக்கு சென்று பெற்றுக்கொண்டேன். 1989 ம் வருடம் கிருஷ்ணா நதிநீர் கால்வாய்க்காக என்னுடைய நிலம் கையகப்படுத்தப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. நான் அதற்காக பணம் பெறவில்லை. நான் பென்ஷன் வாங்குகிறேனா என்றால் இல்லை. 2010 ல் நானும் என்னுடைய தம்பியும் சொத்தை பிரித்துக்கொண்டதை பற்றி இந்த வழக்கில் ஏன் கூறவில்லை என்றால் அது என் அப்பா எங்களுக்கு அளித்த சொத்து அதனால் இந்த வழக்கில் கூறவில்லை. நானும் என் தம்பியும் பாகம் பிரித்துக்கொண்டு அதை பதிவு செய்துக்கொண்டோம் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால அதைப்பற்றி நீதிமன்றத்தில் கேட்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ல் பக்கம் 4 ல் சொத்தானது பிருதுராஜ்யர்யமாய் கிடைக்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் என் தந்தை எனக்கு சொத்தை எழுதி வைக்கும் போது அதனை விற்கவோ வேறு ஏதேனும் பராதினும் செய்யவோ கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ல் தவிர்க்க முடியாத காரணத்தினால் விற்க நேரிட்டால் ஒருவருக்கு தெரியமால் மற்றவர் விற்கக்கூடாது என்றும் இருவரும் சேர்ந்தே விற்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என் தம்பி அதில் ஒரு சிறிய பாகத்தை விற்றுவிட்டார் என்றால் சரிதான் அதை என்னிடம் கூறாமல் விற்றுவிட்டார் என்றால் சரிதான். என் தம்பி விற்றதை வாங்கியவர் சுவாதீனம் எடுத்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வழக்கு சொத்து 16 செண்ட்டில் ஒரு பகுதி ஏற்கனவே விற்கப்பட்டுள்ளது அதில் எனக்கு உரிமை கிடையாது என்றால் சரிதான். மாசிலாமணி பெற்ற சொத்து வழக்கு சொத்துள்ள சர்வே எண்ணா என்றால் இல்லை அது வேறு எண்ணாகும். என்னுடைய பிரமாண

பத்திரிக்கையில் நான் 38 செண்ட் சொத்தை நான் அனுபவித்துவருவதாக நான் கூறியுள்ளது தவறுதான் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண பத்திரத்தில் என் தாத்தா மாசிலாமணியின் பெயரில் தான் சிட்டாவும், அடங்கலும் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சிட்டாவும், அடங்கலும் என் தாத்தாவின் பெயரில் இருந்ததால் பிரதிவாதிகள் எனக்கு தொந்தரவு கொடுத்ததாக என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ளேன் அது எந்தவிதமான தொந்தரவு கொடுத்தார் என்றால் பிரதிவாதிகள் சொத்தில் எங்களுக்கு உரிமை உண்டு என்று கூறி தொந்தரவு செய்கிறார்கள். என் மீது மீண்டும் மீண்டும் காவல் துறையில் புகார் அளித்து என்னை தொந்தரவு செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். நானும் என் குடும்பத்தாரும் சொத்தில் ஏதேனும் செய்ய ஆரம்பித்தால் பிரதிவாதிகள் தொந்தரவு அளிக்கிறார்களா என்றால் சரிதான். சுமார் என் மீது 10 முறை காவல் துறையில் புகார் அளித்துவந்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகு என் மீது எந்த புகாரும் அளிக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் அந்த சொத்தை சுற்றி வேலி அமைத்துள்ளார் என்றால் இல்லை அந்த இடத்தில் நான் டிராவல்ஸ் நடத்திவருகிறேன். காவல் துறையில் புகார் அளிக்கும்பொழுது அந்த சொத்தில் எங்களுக்கும் பங்கு உள்ளது என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் 1 செண்ட் நிலம் என் அனுபவத்தில் தான் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் அது எந்த நிலம் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வழக்கு சொத்தானது காலி மனை என்று கூறியுள்ளேன் ஆனால் என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் வீட்டு வரி கட்டி வருவதாக கூறியுள்ளது தவறு என்றால் சரிதான். என் அப்பா 1982 ம் வருடம் இறந்தார். என் அப்பா ஐ.சி.எப். வேலைப்பார்த்து வந்தார். அவர் இறக்கும்வரை பென்ஷனை அவர் கையொப்பமிட்டுத்தான் வாங்குவார் என்றால் சரிதான். என் அப்பா என்ன படித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா பென்ஷனை வங்கிக்கு சென்றுதான் வாங்குவார் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. வா.சா.ஆ.1 ல் என் அப்பா கையொப்பம் இடவில்லை கைநாட்டுதான் வைத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு இந்த சொத்தை தவிர முருகாம்பேட்டில் சொத்து உள்ளது என்றால் சரிதான். அதை நாங்களும் பிரதிவாதியுனம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த இடத்திற்காகவும் என் மீது அவர் காவல் துறையில் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான்.

இந்த சொத்தானது 1990 ல் கிடைத்தது என்றால் சரிதான். எனக்கு இந்த சொத்து 1990 ல் செட்டில்மெண்ட் மூலம் கிடைக்கப்பெற்றுவிட்டது என்று பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு ஏதேனும் அறிவித்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் பலதடவை சொத்தை சீர்செய்துள்ளரா என்றால் இல்லை. இந்த வழக்கு சொத்து சாமிரெட்டியார் பெயரில் உள்ளதை என் பெயருக்கு மாற்ற ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் என் அப்பா எங்களுக்கு அளித்த சொத்து என்பதால் நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வழக்கு சொத்திற்கு பிரதிவாதி வரி கட்டியுள்ள விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்தானது என் அப்பாவிற்கு சொந்தமானது அல்ல வா.சா.ஆ.1 செல்லாது என்றால் சரியல்ல. இந்த சொத்திற்கு நான் உரிமையாளர் இல்லை என்பதாலும் சுவாதீனம் இல்லை என்பதாலும் நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த 16 செண்டில் ஒரு பகுதியை என் தம்பி சீதாலட்சுமிக்கு விற்றுவிட்ட காரணத்தினால் நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.